தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 6

ஓ.மு.எண். 3595/அ1/2022 நாள். 23.09.2022

----------

பொருள் : பள்ளிக் கல்வி – மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் – மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம் – சிறப்புப் பள்ளிப்பிரிவு – மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்கள் தேசிய கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் – அனைத்து மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்கள் விண்ணப்பங்களை விண்ணப்பிக்க அறிவுறுத்த கோருதல் – தொடர்பாக.

பார்வை : சென்னை – 05, லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் கடிதம் ந.க.எண். 2704024/சிப2/2022 நாள். 15/09/2022.

----------

பார்வையில் காணும் மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் கடிதம் இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது.

மேலும், இது சார்ந்து தக்க அறிவுரைகளை உடன் தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து வகை தனியார் பள்ளிகளின் முதல்வர்களுக்கு வழங்கிட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்குத் தெரிவிக்கலாகிறது.

23/9/2022

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர்

23/09/2022

பெறுநர்
முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டம்.

நகல் (தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது)
மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்,
மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம்,
லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம்,
சென்னை – 05.

D:\ML\ML\A1\2022\Proceedings.docx

பொருள்: மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம், சென்னை–05, சிறப்புப்பள்ளிப்பிரிவு– மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்கள் தேசிய கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் – அனைத்து மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்கள் விண்ணப்பங்களை விண்ணப்பிக்க அறிவுறுத்த கோருதல் – தொடர்பாக.

பார்வை: Scholarship Division, Deptt. of Empowerment of Persons with Disabilities, Ministry of Social Justice & Empowerment Government of India, Address: 5th Floor, Paryavaran Bhavan, CGO Complex, Lodhi Road, New Delhi - 110 003. Tele No. 011 24369051, ppmatric@gmail.com

--------

பார்வையில் காணும் மாற்றுத்திறனாளிகளுக்கான அதிகாரமளித்தல், சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கல்வி உதவித்தொகை மண்டலத்தின் மின்னஞ்சல் (ppmatric@gmail.com) வாயிலாக பெறப்பட்ட தகவலின் அடிப்படையில், மாற்றுத்திறனாளி மாணவ/மாணவியர்களுக்கான தேசிய கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 2022–2023 ஆம் கல்வியாண்டுக்களுக்கான விண்ணப்பங்கள் (புதிய விண்ணப்பங்கள் / புதுப்பித்தல் விண்ணப்பங்கள்) கீழ்கண்டுள்ள வகையில் விண்ணப்பிக்க காலகெடு நிர்ணயிக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:–

**For Pre-Matric Scholarship Scheme**

| | | |
|---|---|---|
| Opening of Portal for registration | : | 20th July ,2022 |
| Last date for online application submission | : | 30th September, 2022 |
| Last date for Institute level verification (INO) | : | 16th October, 2022 |
| Last date for State Verification (SNO) | : | 31st October,2022 |

ii. For Post-Matric/Top Class Education Scholarship Schemes

| | | |
|---|---|---|
| Opening of Portal for registration | : | 20th July ,2022 |
| Last date for online application submission | : | 31st October, 2022 |
| Last date for Institute level verification (INO) | : | 15th November, 2022 |
| Last date for State Verification (SNO) | : | 30th November,2022 |

link: https://scholarships.gov.in

இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்கும் (9ஆம் வகுப்பு முதல் உயர்கல்வி வரை பயிலும்) மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களின் வங்கி கணக்குகளின் விவரங்களை செயல்முறையில் உள்ளதா என்பதை உறுதிசெய்து, இத்திட்டத்திற்காக ஒவ்வொரு கல்வி நிறுவனங்கள் / கல்லூரிகள் / பள்ளிகள் / தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள Institute Nodal Officer–களின் வங்கி தொடர்பான KYC போன்ற உள்ளீடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும் உறுதி செய்து கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள், மத்திய அரசின் வாயிலாக வழங்கப்படும் கல்வி உதவித்தொகையினை (வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி) மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களை கணினி மூலம் (Online) https://scholarships.gov.in என்ற link–ஐ பயன்படுத்தி விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்திற்கான குறித்த கால அளவிற்குள் விண்ணப்பிக்க தவறும்பட்சத்தில், மேற்குறித்த link–இல் விண்ணப்பிக்க இயலாது என்ற விவரமும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தில் விண்ணப்பிக்கும் அனைத்து மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுடைய Bonafide certificate, Previous year mark sheet, மாற்றுத்திறனாளி அடையாள அட்டை அல்லது Smart card–UDID)னை மற்றும் இதர சான்றுகள் தேவைப்படும்சட்சத்தில் ஒவ்வொரு திட்டத்திற்கும் (Pre/Post/Top class) பதிவேற்றம் செய்ய உரிய விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள சான்றிதழ்கள் உள்ளதா என்பதை INSTITUTE NODAL OFFICER உறுதி செய்து அதன்பின்னர், அடுத்த நிலைக்கு (STATE NODAL OFFICER) சமர்பிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பித்த பயனாளிகளின் தற்போது பயின்று வருவதற்கான Bonafide சான்றிதழ், Previous year mark sheet, மாற்றுத்திறனாளி அடையாள அட்டை அல்லது Smart card-UDID)கள் பதிவேற்றம் இல்லாத நபர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை STATE NODAL OFFICER அவர்களால் மீண்டும் INSTITUTE NODAL OFFICER அவர்களுக்கு திருப்பி அனுப்பப்படும் (அல்லது) நிராகரிக்கப்படும் என்ற விவரமும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படா வண்ணம் ஒவ்வொரு கல்வி நிறுவனத்தில் பணியாற்றி வரும் INSTITUTE NODAL OFFICER-களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**(ஒ/ம்) ஜெசிந்தா லாசரஸ்**
**மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்**

**//உத்தரவுப்படி//**

**உதவி இயக்குநர் (சிப)(பொ)**

16/09/2022